முருகப்பெருமான் துணை

**மகான் உமாபதிசிவாச்சாரியார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.12.2023,** வெள்ளிக்கிழமை

1. ஆறுமுகனார் ஞான அவதாரமே
அண்ணலே ஞான சொரூபமே
மாறுதலை நடத்தும் வண்ணம்
மகத்துவம் அருளுகின்ற அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது சிலைதிங்கள்
வரங்களாக முன்னான்கோர் திகதி புகர்வாரம்
(சோபகிருது வருடம் மார்கழி மாதம் 13 ம் நாள், 29.12.2023, வெள்ளிக்கிழமை)
வழங்குவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை உமாபதிசிவாச்சாரியாரும்
அருளுவேன் உலகநலம்பெற
பூஜித்து ஞானிகள் பேரிலே
புண்ணிய வழிகளும் காட்டி வருகின்ற
4. வருகின்ற அரங்கமகா ஞானியரின்
வல்லமையான ஞான வழிகளை
தரும பலத்தோடு ஏற்றுவர
தரணியெங்கும் மாற்றம் நிகழும்
5. நிகழவே கலித்துன்பங்களை
நீதி கெட்ட ஆளுமைகளை
செகமதில் இல்லா இனி விரட்டி
சித்திமிகு நல்லோர்கள் தலைமை
6. தலைமை ஞானவான்கள் நிறைந்த
தனிப் பெருஞ் சக்தியாக மாற்றி
ஊழலில்லா வஞ்சம் சூழ்ச்சியிலா
உண்மை காக்கும் ஞான ஆட்சியாக

7. ஆகவே அற்புதம் தன்னை
அரங்கன் அவதார நோக்கமாக
யுகத்தில் ஞானப் படைகள் உருவாக்கி
உரைத்திடுவேன் மாற்றம் செய்யும்

8. செய்யுமே அரங்க மகான் சக்தி
சித்திமிகு ஆற்றலாக இறங்கி
அய்யமற மக்களை தேற்றி
அகிலத்தில் ஞான உலகமாக மாற்றம்

9. மாற்றம் கண்டு இனிதே
மகான் சுப்பிரமண்யர் வழிபாடு
ஆற்றல்பட எங்கும் பரவிநிற்க
அற்புதம் தனை உலகே கண்டு

10. கண்டுமே தவதரும பலம் கூடிட
கலியோன் மிரண்டு விரண்டு
உண்டான துன்பம்தனை விட்டு
உலகை விட்டே அகலநேரும்

11. நேருமை கொண்ட மக்கள்
நீதி காப்போமென களம் கண்டு
வரும்காலம் ஞான ஆட்சி
வையகத்தில் படைக்க நேரும்

துல்லிய ஆசி முற்றே

–சுபம்–